முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.
முன்னிலை திருமதி.T.நித்யகலா,B.Com.,BL.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திட்டக்குடி.
2023 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 28 ஆம் நாள் புதன்கிழமை.
OS.31/2022

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், ஆவட்டி மதுரா, குடிகாடு கிராமத்தில் வசிக்கும் அய்யாகண்ணு குமாரர் இந்து சுமார் 62 வயதுள்ள பிச்சைப்பிள்ளை ....... வாதி

/எதிர்/

1.கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், ஆவட்டி மதுரா, குடிகாடு கிராமத்தில் வசிக்கும் கெங்காசலம் குமாரர், இந்து, முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் மற்றும் கவுன்சிலர் சுமார் 63 வயதுள்ள ராமலிங்கம்

2.கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், ஆவட்டி மதுரா, குடிகாடு கிராமத்தில் வசிக்கும் ராமலிங்கம் குமாரர் இந்து சுமார் 37 வயதுள்ள ரமேஷ்

3.கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், திட்டக்குடியில் தனது அலுவலகத்தைக் கொண்டுள்ள வருவாய் வட்டாட்சியர், திட்டக்குடி

4.கடலூர் மாவட்டம், கடலூரில் தனது அலுவலகத்தைக் கொண்டுள்ள கூடுதல் ஆட்சியர், (வருவாய்), கடலூர்

5.கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், விருத்தாசலத்தில் தனது அலுவலகத்தைக் கொண்டுள்ள கோட்டாட்சியர், விருத்தாசலம் ....... எதிர்வாதிகள்

வழக்குச் சொத்தைப் பொருத்து வாதிக்கு சித்தித்துள்ள Prescriptive Easement மற்றும் Easement of Necessity பாத்தியம் கிடைக்கும்படிக்கும், வாதிக்கு சித்தித்துள்ள Prescriptive Easement மற்றும் Easement of Necessity பாத்தியத்திற்கு விரோதமாக எதிர்வாதி வழக்குச் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து விளைநிலமாக மாற்றாமல் இருக்கும்படிக்கும், வழக்குச் சொத்தான பாதை வழியாக வாதி எப்பொழுதும்போல் அமைதியான முறைமையில் சென்று புழங்கி அனுபவித்து

வருவதை எதிர்வாதி எந்தவகையிலும் யாதொரு தடையோ, இடையூறோ செய்யாது இருக்கும்படிக்கும், மேற்படியார்களை நிலைக்கால உறுத்துக்கட்டளை மூலம் தடை செய்யும்படிக்கும், தாவாவின் செலவுத் தொகை வாதிக்கு எதிர்வாதிகளால் கிடைக்கும் படிக்கும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்த நாள் *29.04.2022*, வழக்கு சொத்தின் மதிப்பு ரூ.2000/- அதற்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் சட்டம் பிரிவு *31* மற்றும் 27(C) ரூ.60/- நீதிமன்றக் கட்டணமாகச் செலுத்தப்பட்டுள்ளது. *11.09.2021, 07.07.2021, 26.03.2022* மற்றும் *16.04.2023* ஆகிய தேதிகளில் ஐவனூர் கிராமத்தில் வழக்கு மூலம் ஏற்பட்டுள்ளது

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன் *28.06.2023* அன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது வாதிக்காக வழக்கறிஞர் திரு.M.பழனிமுத்து,MA.,BL., அவர்கள் ஆஜராகி வந்த நிலையில், *1* முதல் *5* எதிர்வாதிகள் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும் வாதி ஆஜராகாததால் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

தீர்ப்பாணை

*1.*இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
*2.*செலவுத் தொகை பற்றிய உத்தரவு இல்லை.

செலவுத் தொகைப்பட்டியல்

*(*இருதரப்பிலும் செலவுத் தொகைபட்டியல் தாக்கல் இல்லை*)*

சொத்துவிபரம்

விருத்தாசலம் ரி.டி,. திட்டக்குடி சப்.டி திட்டக்குடி வட்டம் ஐவனூர் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்.31/2C2A-0.10.00 ஏர்ஸ் வழக்கு சொத்தாகும்.

மேற்படி சொத்துக்கு வடபுறத்தில் வாதிக்கு பாத்தியமான பட்டா எண்.*12*ல்

1.அ.பு.ரி.சர்வே எண்.30/1C1A-0.04.50 ஏர்ஸ்

2.அ.பு.ரி.சர்வே எண்.30/1C1B-0.60.50 ஏர்ஸ்

3.அ.பு.ரி.சர்வே எண்.30/1C2A-0.02.50 ஏர்ஸ்

4.அ.பு.ரி.சர்வே எண்.30/1C2B-0.49.50 ஏர்ஸ்

5.அ.பு.ரி.சர்வே எண்.31/2C1A-0.01.00 ஏர்ஸ்

6.அ.பு.ரி.சர்வே எண்.31/2C1B-0.18.50 ஏர்ஸ் சொத்துக்கள் உள்ளன.

2023ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 28 நாள் என்னுடைய கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.